## மே - 07 - உயிர்ப்புக் கால 4ம் வார ஞாயிறு

**“நான் ஆடுகள் வாழ்வைப் பெறும் பொருட்டு அதுவும் நிறைவாகப் பெறும்பொருட்டு வந்துள்ளேன்.” (யோவா.10:10)**

### முதல் வாசகம் : திருத்தூதர் பணி 2 : 14, 36 – 41

பெந்தகோஸ்து என்னும் நாள் வந்தபோது, பேதுரு பதினொருவருடன் சேர்ந்து எழுந்து நின்று, உரத்த குரலில் அவர்களிடம் பின்வருமாறு கூறினார், ”யூத மக்களே, எருசலேமில் வாழும் மக்களே, இதைத் தெரிந்துகொள்ளுங்கள். எனது சொற்களைக் கவனித்துக் கேளுங்கள். ஆகையால் நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவைக் கடவுள் ஆண்டவரும் மெசியாவுமாக்கினார் என்பதை இஸ்ரயேல் மக்களாகிய நீங்கள் அனைவரும் உறுதியாக அறிந்துகொள்ளுங்கள்” என்றார். அவர்கள் இதைக் கேட்டு உள்ளம் குத்தப்பட்டவர்களாய் பேதுருவையும் மற்ற திருத்தூதர்களையும் பார்த்து, ”சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும்?” என்று கேட்டார்கள். அதற்குப் பேதுரு, அவர்களிடம், ”நீங்கள் மனம் மாறுங்கள். உங்கள் பாவங்களிலிருந்து மன்னிப்புப் பெறுவதற்காக ஒவ்வொருவரும் இயேசு கிறிஸ்துவின் பெயரால் திருமுழுக்குப் பெறுங்கள். அப்பொழுது தூய ஆவியைக் கொடையாகப் பெறுவீர்கள். ஏனென்றால் இந்த வாக்குறுதியானது உங்களுக்கும் உங்களது பிள்ளைகளுக்கும் தொலையிலுள்ள யாவருக்கும் ஆண்டவராகிய கடவுள் தம்மிடம் அழைக்கும் அனைவருக்கும் உரியது” என்றார். மேலும் அவர் வேறுபல சான்றுகளை எடுத்துக்கூறி, ”நெறிக்கெட்ட இந்தத் தலைமுறை யிலிருந்து, உங்களைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள்” என்று அறிவுறுத்தினார். அவருடைய வார்த்தை களை ஏற்றுக் கொண்டவர்கள் திருமுழுக்குப்பெற்றார்கள். அன்று ஏறக்குறைய மூவாயிரம் பேர் அவர்களோடு சேர்க்கப்பட்டனர்.

### இரண்டாம் வாசகம் : 1 பேதுரு 2 : 20 – 25

அன்பிற்குரியவர்களே! குற்றம் செய்ததற்காக நீங்கள் அடிக்கப்படும்போது பொறுமையோடு இருப்பதில் என்ன சிறப்பு? மாறாக, நன்மை செய்தும், அதற்காகப் பொறுமையோடு துன்புற்றால், அது கடவுளுக்கு உகந்ததாகும். கிறிஸ்துவும் உங்களுக்காகத் துன்புற்று ஒரு முன்மாதிரியை வைத்துச் சென்றுள்ளார். எனவே நீங்கள் அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுங்கள் இதற்காகவே அழைக்கப்பட்டுள்ளீர்கள். ”வன்செயல் எதுவும் அவர் செய்ததில்லை வஞ்சனை எதுவும் அவர் வாயில் இருந்ததில்லை.” பழிக்கப்பட்டபோது பதிலுக்குப் பழிக்கவில்லை துன்புறுத்தப்பட்ட போது அச்சுறுத்தவில்லை நியாயமாகத் தீர்ப்பு வழங்குவோரிடம் தம்மை ஒப்படைத்தார். சிலுவையின்மீது தம் உடலில் நம் பாவங்களை அவரே சுமந்தார். நாம் பாவங்களுக்கு இறந்து, நீதிக்காக வாழ்வதற்கே இவ்வாறு செய்தார். அவர்தம் காயங்களால் நீங்கள் குணமடைந்துள்ளீர்கள். நீங்கள் வழிதவறி அலையும் ஆடுகளைப்போல இருந்தீர்கள். ஆனால் இப்பொழுது உங்கள் ஆன்மாக்களின் ஆயரும் கண்காணிப்பாளருமாய் இருப்பவரிடம் திரும்பி வந்திருக்கிறீர்கள்.

**பதில்பாடல்:** ஆண்டவரே என் ஆயர் எனக்கேதும் குறையில்லை

### நற்செய்தி: யோவான் 10 : 1- 10

அக்காலத்தில் இயேசு கூறியது: நான் உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன் ஆட்டுக்கொட்டிலில் வாயில் வழியாக நுழையாமல் வேறு வழியாக ஏறிக் குதிப்போர் திருடர் அல்லது கொள்ளையராய் இருப்பர். வாயில் வழியாக நுழைபவர் ஆடுகளின் ஆயர். அவருக்கே காவலர் வாயிலைத் திறந்துவிடுவார். ஆடுகளும் அவரது குரலுக்கே செவிசாய்க்கும். அவர் தம்முடைய சொந்த ஆடுகளைப் பெயர் சொல்லிக் கூப்பிட்டு வெளியே கூட்டிச் செல்வார். தம்முடைய சொந்த ஆடுகள் அனைத்தையும் வெளியே ஓட்டி வந்தபின் அவர் அவற்றிற்கு முன் செல்வார். ஆடுகளும் அவரைப் பின்தொடரும். ஏனெனில் அவரது குரல் அவற்றுக்குத் தெரியும். அறியாத ஒருவரை அவை பின் தொடரா. அவரை விட்டு அவை ஓடிப்போகும். ஏனெனில் அவரது குரல் அவற்றுக்குத் தெரியாது.” இயேசு அவர்களிடம் உவமையாக இவ்வாறு சொன்னார். ஆனால் அவர் சொன்னதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. மீண்டும் இயேசு கூறியது ”உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன் ஆடுகளுக்கு வாயில் நானே. எனக்கு முன்பு வந்தவர் அனைவரும் திருடரும் கொள்ளையருமே. அவர்களுக்கு ஆடுகள் செவிசாய்க்கவில்லை. நானே வாயில். என் வழியாக நுழைவோருக்கு ஆபத்து இல்லை. அவர்கள் உள்ளே போவர் வெளியே வருவர் மேய்ச்சல் நிலத்தைக் கண்டுகொள்வர். திருடுவதற்கும் கொல்வதற்கும் அழிப்பதற்குமன்றித் திருடர் வேறெதற்கும் வருவதில்லை. ஆனால் நான் ஆடுகள் வாழ்வைப் பெறும்பொருட்டு, அதுவும் நிறைவாகப் பெறும் பொருட்டு வந்துள்ளேன்“ என்றார்.

**தியானம் :** மனிதன் நினைப்பது ஒன்று, ஆனால் கடவுள் நிறைவேற்றிக் காட்டுவது வேறொன்று. “நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவை கடவுள், ஆண்டவரும் மெசியாவுமாக்கினார்” (தி.ப..2:36). ஆட்டுமந்தையைக் கொள்ளையிட வந்த சாத்தானுடைய குரலுக்கு செவிமடுத்து வாழ்வுக்கு ஊற்றான இயேசுவை மனிதர்கள் கொன்றார்கள். ஆனால் கடவுள் இறந்த அவரை உயிரோடு எழுப்பினார் (தி.ப.3:15). சாவுக்கே சாவுமணி அடித்தார் கடவுள். நம்முடைய ஆன்மாக்களை அழிப்பதற்குப் போராடிக்கொண்டிருக்கும் சாத்தானுடைய தந்திரங்களுக்கு ஆட்பட்டு மனிதன் பாவத்தில் விழுந்து அவதிப்பட்டுக்கொண்டிருக்கும் வேளையில் பாவச் சேற்றில் விழுந்த மனிதனை தூய்மையாக்கித் தூக்கிவிட, கடவுளால் அனுப்பப்பட்டவர்தான் நம் ஆண்டவர் இயேசுக்கிறிஸ்து. இவர் தமது மீட்புச் செயலினால் மனிதனை மீட்டு மீண்டும் கடவுளுக்கு உரியவர்களாக மாற்றினார். நமது பாவங்களுக்கு விலையாக நம் ஆண்டவர் கொடுத்தது அவருடைய விலைமதிப்பில்லாத பரிசுத்த இரத்தம். இதனால் நாம் நம்முடைய பாவ மனசாட்சியினின்று, குற்ற மனசாட்சியினின்று, மீட்கப் பட்டிருக்கின்றோம், தூய்மை அடைந்திருக்கின்றோம் (1பேது.1:18-19). இதன்வழியாக கடவுளின் நிலைவாழ்வை பெற்றுக் கொண்டோம். கடவுளின் இரக்கத்தை, அன்பை, அருளை, நிலைவாழ்வைப் பெற்றுக்கொண்ட நாம் அதனைப் பிறருக்கும் அறிக்கையிட வேண்டும் என்பதே கடவுளின் விருப்பம். “கடவுள் மிகுந்த இரக்கம் உடையவர். அவர் நம்மீது மிகுந்த அன்பு கொண்டுள்ளார். குற்றங்களின் காரணமாய் இறந்தவர்களாயிருந்த நம்மை அவரது அன்பின்மூலம் இணைந்து உயிர்பெறச் செய்தார். எனவே பிற இனத்தார் அனைவரும் இவர்மீது நம்பிக்கை கொண்டு இவருக்குக் கீழ்ப்படியுமாறு இவர் பெயர் விளங்க இவர் வழியாகவே நாங்கள் திருத்தூதுப்பணி செய்வதற்குரிய அருளைப் பெற்றுக்கொண்டோம் (உரோ.1:5) என்பதை உணர்ந்தவர்களாய் உயிர்ப்பின் சாட்சிகளாய் நாம் மாறுவோம் நம்முடைய மீட்பை உலகம் முழுவதும் பிரகடனப்படுத்துவோம்.